**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**
**OS No.150/2022 நாள் 09.09.2024**

**PW1- வரதராஜன், த/பெ.அருணாச்சலம்**

**குறுக்கு விசாரணை**

வாசாஆ.3 கிரயபத்திரத்தில் பிரதிவாதிகள் மைனராக இருக்கும் போது அவரது தாயார் காப்பாளராக இருந்து கிரயம் வாங்கிய கிரய பத்திரம் தாவா சொத்து என்றால் சரிதான். கிரய ஆவணத்தில் மைனரின் விலாசம் 2110/1 எல்லையம்மன்கோவில் தெரு, தஞ்சாவூர் என்று உள்ளது என்றால் சரிதான். வாசாஆ.4 அடமான பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள பூமிநாதன் என்பவர் எனது பேத்தியின் கணவர். பூமிநாதனுக்கு இந்த கடன் வாங்குவதற்கு முன்பே கடன் இருந்ததா என்றால் இருந்தது அதை அவர் ஏற்கனவே அடைத்துவிட்டார். அந்த அடைத்த ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பூமிநாதன் பெயரில் வாங்கிய அடமான பத்திரத்தில் பிரதிவாதியின் விலாசம் 2110/1 எல்லையம்மன்கோவில் தெரு, தஞ்சாவூர் என்று உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அது வாசாஆ.7. அதில் கண்டுள்ள 1ம் பிரதிவாதியின் விலாசம் சென்னை சைதாப்பேட்டை என்றும் 2ம் பிரதிவாதியின் விலாசம் தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ் ரோடு, கோஆப்பரேட்டிவ் சொசைட்டி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ் ரோடு, கோஆப்பரேட்டிவ் சொசைட்டி என்ற விலாசத்தில் பெற்றுக்கொண்டு அஞ்சலக ஒப்புகை அட்டை என்றால் சரிதான். அது வாசாஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாசாஆ.9 ஆவணம் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட சென்னை சைதாப்பேட்டை முகவரி தவறு என்று தபால் திருப்பப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் போது வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விலாசத்தை சொல்லாமல் அடமான பத்திரத்தில் உள்ள பிரதிவாதியின் விலாசத்தை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி வாதியிடம் அடமான பத்திரத்தில் சொல்லியுள்ளதுபோல் ரூ-15,00,000/- கடன் வாங்கவில்லை என்றும் ஆனால் வாதியின் மகன் கோவிந்தராஜனிடம் தான் பிரதிவாதிகள் மூன்று முறை புரோநோட்டின் மீது கடன் பெற்றதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தான் கடன் கொடுத்தேன் எனது மனைவின் நகைகளை விற்றும் எனது தொழிலின் முதலீட்டில் வந்த தொகையையும் ஒன்று சேர்த்து பிரதிவாதி எனக்கு நேரடியாக தெரியும் என்ற முறையில் கடன் கொடுத்தேன். அடமான பத்திரத்தில் மேற்படி சொன்னவாறு சொல்லவில்லை என்றால் பத்திரத்தில் அவ்வாறு சொல்லவில்லை. நான் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றும் எனது மகன் கொடுத்த தொகைக்கு பினாமியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகன் கோவிந்தராஜனிடம் 25.02.2016 தேதியில் ரூ.3,50,000/- மாதவட்டி 4 சதவீதம் கடன் வாங்கினார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 5.4.2016 முதல் 9.1.2017 வரை 10 மாதங்களுக்கு ரூ.3,50,000/- மாதவட்டி 4 சதவீதம் வீதம் மாதாமாதம் ரூ.14,000/- என் மகனிடம் கொடுத்துள்ளார் என்றால் அதைப்பற்றி தெரியாது. அவ்வாறு பணம் கொடுத்ததற்கு ரசீது என் மகன் கொடுக்க

மறுத்துவிட்டார் என்றும் காரணம் கடன் வாய்மொழியாக கொடுத்ததால் ரசீது கிடையாது என்றும் சொன்னார் என்றால் அதுபற்றி தெரியாது. 4சதவீதம் வட்டி அதிகமாக இருப்பதால் அதை குறைக்குமாறு கேட்டுக்கொண்டதன்பேரில் 3.5 சதவீதமாக வட்டி குறைத்து அதற்கு மாதாமாதம் ரூ-12,250/-ஐ 6.2.2017 முதல் 7.4.2018 வரை 15 மாதங்களுக்கு வட்டி மட்டும் கூடுதலாக ரூ-1,83,750/- பிரதிவாதி கொடுத்துவந்தார் என்றால் தெரியாது. பிறகு எனது மகனிடமிருந்து 7.4.2018 அன்று ரூ.60,000/- ரொக்கமாக 3.5 சதவீதம் வட்டிவீதத்திற்கு பிரதிவாதிகள் கடன் வாங்கினார்கள் என்றால் தெரியாது. முதலில் வாங்கிய ரூ.3,50,000/- மற்றும் இரண்டாவதாக வாங்கிய ரூ.60,000/- இரண்டுக்கும் சேர்த்து ரூ.4,10,000க்கு 3.5 சதவீதம் வட்டியாக 7.5.2018 முதல் 12.8.2018 வரை நான்கு மாதத்திற்கு பிரதிவாதி வட்டி கட்டினார் என்றால் தெரியாது. வட்டி தொகையை பிரதிவாதியின் அம்மாவின் பென்ஷன் தொகையில் இருந்து கட்டுவதால் சிரமம் எற்பட்டு அதனால் என் மகனிடம் வட்டியை அரசு வட்டி வீதம் கொடுத்தால் கடனை தீர்த்துவிடுவதாக கேட்டுக்கொண்டதற்கு கோபப்பட்டு என் மகன் கடன் தான் வாங்கவில்லை என்றும் அவரது தந்தையான நான் தான் வாங்கியதாக கடன் பத்திரத்தை மேலாண்மை செய்து எழுதிக்கொண்டதாக பிரதிவாதி கூறுகிறார் என்றால் சரியல்ல. கடன் வாங்கியது, விலாசம் தவறாக சொன்னது பிரதிவாதி கடன் திருப்பி செலுத்தியதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. கடன் பத்திரம் செல்லாது என்றும் என் மகனுக்காக நான் பினாமியாக தாக்கல் செய்த இந்த வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றும் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.